II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 196 of 2022**

Deposition of witness for the Plaintiff/PW 1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 11/08/2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Parimala | Age | : | |
| Father's / Husband's Name | : | | Village | : | |
| Taluk | : | | Distict | : | |

<u>பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி தானாக ஆஜராகி குறுக்கு விசாரணை செய்கிறார்=</u>

என் கணவர் பெயர் ஜெயபாலன். எனது தாயார் சரோஜம்மாள் 2020ம் ஆண்டு பணி ஓய்வு பெற்றார். 27.09.2020ல் இறந்துவிட்டார். அப்போது அவருக்கு என்ன வயது இருக்கும் என்று எனக்குத் தெரியாது. சரோஜம்மாள் பணி ஓய்வு பெற்றத்தில் இருந்து தனியாக தான் இருந்தார். பிறகு அவருக்கு கொரோனா வந்ததால் அவரை அழைத்து வந்து ஜீ.எச்.ல் சேர்த்தோம். அவருக்கு உதவியாக என்று யாரையும் அமர்த்தவில்லை. பாதுகாப்பிற்காக ஒரு சிறிய பகுதியை ஒதுக்கி வாடகைக்கு விட்டோம். சரோஜம்மாள் உடல்நிலை சரியில்லாமல் இருந்த போது அவரை நாங்கள் பார்த்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. நான் லீவ் போட்டு உடன் இருந்து பார்த்தேன். அதற்கு ஆதாரம் ஏதும் உள்ளதா என்றால் மருத்துவமனை ரசீதுகள் தொலைந்துவிட்டன. ராமச்சந்திரா மருத்துவமனையில் வைத்து பார்த்தேன். சரோஜம்மாளின் வீட்டில் பிரதிவாதியாகிய நான் தான் 10 வருடங்களாக வாடகைக்கு குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். சரோஜம்மாள் இதுவரை பிரதிவாதியாகிய என் மீது ஏதேனும் குறை சொல்லியுள்ளாரா என்றால், காவல் நிலையத்தில் புகார் சொல்லியுள்ளார். எங்கள் மீது பரிதாபம் பட்டிருந்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதியை சரோஜம்மாள் தான் வாடகைக்கு வைத்துள்ளார் என்றால் சரியல்ல. நாங்கள் தான் வைத்தோம். சரோஜம்மாளுக்கு நான் எந்த பணிவிடையும்

பராமரிப்பும் செய்யவில்லை என்றால் சரியல்ல. (இந்நிலையில் சாட்சி பிரதிவாதியும் சண்டையிட்டதால் நீதிமன்றத்தின் மாண்பை கருத்திற்கொண்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக இத்துடன் நிறுத்திவைக்கப்படுகிறது).